# மாணவர்களின் அமைதிவழி போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அரசின் ஜனநாயகத்திற்கு எதிரான நிலைப்பாட்டினை வெளிப்படுத்துகிறது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் தெரிவிப்பு



மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் அமைதியான வழியில் போராடிய மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஜனநாயகத்திற்கு எதிரான அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி நிற்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில், சுதந்திர தினத்தினை கரிநாளாக அறிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் பலர் தாக்கப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழர் தாயகத்தின் பல பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட பல போராட்டங்களில் பலர் தாக்கப்பட்டும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டும் அரசாங்கம் தனது அராஜகத்தை வெளிப்படுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு நிதியுதவி வழங்குகின்ற சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அனைத்து நாடுகளும் இலங்கை அரசாங்கத்தினது ஜனநாயகத்தின் குரலை நசுக்கும் செயற்பாடுகளை அவதானித்துச் செயற்பட வேண்டுமெனவும் சட்டத்தரணி சுகாஸ் மேலும் குறிப்பிட்டார்.


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 10 திங்கட்கிழமை 05.02.2024 கதிர் 174







# யாழ் பல்கலை மாணவர் மீது வட்டுக்கோட்டையில் தாக்குதல் சிவில் உடையில் இருந்த பொலிசாரே தாக்கியதாக முறையீடு

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவு



யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிசாரின் தாக்குதலுக்குள்ளான யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவன் கருணாகரன் நிதர்ஷன், தனது உயிரைக் காப்பாற்றுமாறு கோரி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்தார்.

"இன்னுமொரு அலெக்சாக என்னை வட்டுக்கோட்டை பொலிசார் கொன்றுவிடுவார்களோ, என்ற பயத்திலேயே அங்கிருந்து ஓடி வந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்தேன்" எனவும், "எனக்கு ஏதும் நடந்தால் வட்டுக்கோட்டை பொலிசாரே முழுமையான பொறுப்பினையும் ஏற்க வேண்டும்!" என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டினைப் பதிவு செய்தபின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எனது கற்றல் நடவடிக்கைகளுக்காக இன்று காலை யாழ் பல்கலைக்கழகத்திற்கு வீட்டிலிருந்து புறப்பட்டேன்.

இந்நிலையில் சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் சென்றுவிட்டு மீளத் திரும்பி வந்த பொழுது வட்டு இந்துக் கல்லூரிக்கு அண்மையாக நின்ற பொலிசார் வழிமறித்தனர். வழிமறித்த பொலிசார் 2▶

# கெஹலியவை பதவியிலிருந்து நீக்கக் கோரி கையெழுத்து சேகரிக்கும் வேட்டை ஆரம்பம்!



கெஹலிய ரம்புக்வெலவை சுற்றாடல் துறை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு கோரும் மனுவில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இன்று ஆரம்பிக்கப்பட்டது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், சுற்றாடல் துறை அமைச்சர் பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு அவருக்கு தார்மீக உரிமை இல்லை என்று தெரிவித்து சில சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்று கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பொது மனுவில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கை பொதுப்பயன்பாடுகள்ஆணைக குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

கொலைக் குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சிறைச்சாலை வைத்தியசாலையில் மருந்து உட்கொள்வதை மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் அரச மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின் தலைவர் வைத்தியர் ருக்ஷான் பெல்லான இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சிறைச்சாலை வைத்தியசாலையைத் தொடர்பு கொண்டு ஊடகங்கள் வினவியிருந்தன.

இதற்குப் பதிலளித்த 2▶

# சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணி! ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரைக் களமிறக்கத் திட்டம்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினால் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் பிரேரிக்கப்பட உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய கூட்டணிக்கு நியமிக்கப்படும் தலைமைத்துவ சபையே ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய, தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள மேற்படி பொதுஜன ஐக்கிய முன்னணியானது கதிரைச் சின்னத்தில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அதற்கமைய, பொருத்தமான சுப நேரத்தில் புதிய கூட்டணியை விரைவில் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்வதற்கு 2▶

# பதினாறு லட்சம் பேருக்கு மேல் தாமரை கோபுரத்துக்கு வருகை

தாமரைக் கோபுரம் திறக்கப்பட்ட பின்னர் அதனைப் பார்வையிட பதினாறு லட்சத்திற்கும் அதிகமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கோபுரம் திறந்து வைக்கப்பட்டு 16 மாதங்களில் பதினைந்து இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஐநூற்றுப் பதினாறு (15,54,516) உள்ளூர் பார்வையாளர்கள் வருகை தந்துள்ளதாக தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். மேலும், இதே கால கட்டத்தில் ஐம்பத்தோராயிரத்து முந்நூற்று எண்பத்தாறு (51,386) வெளிநாட்டவர்கள் தாமரைக் கோபுரத்தை பார்வையிட வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாமரைக் கோபுரம் பொதுமக்களுக்காக 2022 ஆம் வருடம் செப்டம்பர் 15 ஆம் திகதி திறக்கப்பட்ட நாள் முதல் தினமும் 5000 உள்ளூர் பார்வையாளர்களும் 400 வெளிநாட்டவர்களும் வருகை தந்துள்ளதாகவும், அதற்கமைய தாமரை கோபுரத்தை பார்வையிட மாதந்தோறும் ஒரு லட்சம் பேர் வருகை தருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். 2▶

# இந்தியா சென்ற அநுர ஜெய்சங்கருடன் பேச்சு



இந்திய மத்திய அரசின் அழைப்பையேற்று டில்லி சென்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருடன் இன்று 2▶

# சாந்தன் விரைவில் நாடு திரும்புவார்! அமைச்சர் டக்ளஸ் முனைப்பு

முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களுள் ஒருவரான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு 2▶

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் மறித்த பொழுது எதற்காக நிற்காது சென்றாய்?, என கேட்டனர்.

போக்குவரத்துப் பொலிசார் இல்லை என்ற அடிப் படையில் அவசரமாகச் சென்றேன் எனப் பதில் கூறினேன். இந்நிலையில் திடீரென அங்குவந்த சிவில் உடை தரித்த பொலிசார் வீதியில் வைத்து சரமாரியாகத் தாக்கினர். இதனை நான் காணொளியும் எடுத்தேன். இந்நிலையில் தொலைபேசியினையும் பறித்து என்னை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள அறை ஒன்றுக்குக் கொண்டு சென்றனர்.

அறையினுள் பொலிசார் காலை விரித்து தலைலகீழாக தூக்கி அடித்தனர். அடித்துக் கொண்டு தொலைபேசியில் உள்ள காணொளியை அழிப்பதற்கு தொலைபேசிக் கடவுச்சொல்லைக் கேட்டனர். நான் மறுத்தேன். மறுத்த பொழுது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடாத்தினர்.

போக்குவரத்து விதிகளை மீறியிருந்தால் எனக்கு தண்டம் விதியுங்கள். இல்லை நீதிமன்றம் அனுப்புங்கள், எனக் கூறியபோதும் என்னை அடித்தனர்.

இதனையடுத்து எனக்கு சுவாசத்தை உள்ளெடுப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. இதனையடுத்து உடனடியாக என்னை வெளியில் கொண்டு வந்து அமர்த்தினர். அமர்த்திய பொழுது வீதியில் என்னை அடித்த செய்தி கேட்டு தாயார் வருகை தந்தார்.

இந்நிலையில் வீதியில் தாக்கியபோது கடையில் இருந்த இருந்த சிசிடிவி காணொளியை அழிப்பதற்காக பொலிஸார் அனைவரும் சென்றுவிட்டனர். அடிக்குப் பயந்து இருந்த நான், அலெக்ஸ்க்கு நடந்த சம்பவத்தை நினைத்து பயத்தில் ஓடி வந்து விட்டேன்.

தற்பொழுது மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டினைப் பதிவு செய்கின்றேன். இன்னுமொரு அலெக்சாக என்னை வட்டுக்கோட்டை பொலிசார் கொன்றுவிடுவார்களோ, என்ற பயத்திலேயே ஓடி வந்தேன். எனக்கு ஏதும் நடந்தால் வட்டுக்கோட்டை பொலிசாரே முழுமையான பொறுப்பினையும் ஏற்க வேண்டும், எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வட்டுக்கோட்டை பொலிஸாரால், கடுமையான சித்திரவதைக்கு உள்ளான நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

குறித்த உயிரிழப்பானது ஆட்கொலையே என யாழ். நீதிவான் நீதிமன்றம் மரண விசாரணை கட்டளையில் குறிப்பிட்டுள்ளது

இளைஞரின் கொலை தொடர்பில் நேரடி சாட்சியான, இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞர், சித்திரவதைக்குத் தம்மை உள்ளாக்கியவர்கள் ஐவர் என அடையாளம் காட்டிய போதிலும், பொலிஸார் நால்வரையே கைது செய்து மன்றில் முற்படுத்தி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்துச் செல் கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வாரம் சுன்னாகம் பொலிஸாரால் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கடுமையாகத் தாக்கி சித்திரவதைக்கு உள்ளாக்கிய நிலையில், கைதான இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று இருந்தார்.

அச்சுவேலி பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, விசாரணைக்குச் செல்லாத இளைஞரை அச்சுவேலி பொலிஸார் வீதியில் வழிமறித்துக் கடுமையாகத் தாக்கியமையால், இளைஞர் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் தற்போது வட்டுக்கோட்டை பொலிஸாரால் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சியில் யாழ். பல்கலைலக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பேரணியில் பொலிஸார் மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதல் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (01, அ)

## கெஹலியவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வைத்தியசாலையின் பேச்சாளர், “அரச வைத்தியசாலையில் மருந்துகளை எடுக்க மறுத்தல் அல்லது தனியார் வைத்தியசாலை செல்லுதல் போன்ற எந்தக் கோரிக்கையும் இதுவரை அமைச்சர் தரப்பிலிருந்து முன்வைக்கப்படவில்லை” - என்று தெரிவித்துள்ளார். (அ)

## சிறீலங்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 45க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கதிரை சின்னத்தில் கூட்டணி அமைக்க விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், புதிய கூட்டணிக்கான தலைமைக்குழு நியமனம் அடுத்த சில நாட்களில் நடைபெறும் என்றும் மேற்படி தகவல்கள் தெரிவிக கின்றன. (ரெப-05)

## பதினாறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை நாட்களில் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையும், வார இறுதி நாட்களில் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரையும், விழாக் காலங்களில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையும் தாமரைக் கோபுரம் திறந்திருக்கும் எனவும், தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட வரும் மக்களுக்கு உணவக வசதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். (ரெப-06)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்தினர். இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, செயலாளர் வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய நிறைவேற்று பேரவை உறுப்பினர் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோர் இந்தியா சென்றுள்ளனர். (அ)

## சாந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மதம் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரஸ்தாபித்திருந்த நிலையிலேயே ஜனாதிபதியினால் சம்மதம் தெரிவிக்கப்பட்டுளதாக அறியக்கிடைத்துள்ளது.

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# சைவத் தமிழ் மன்றத்தின் நான்காவது பட்டமளிப்பு





(வி.ரி. சகாதேவராஜா)

சைவத் தமிழ் மன்றத்தின் அகில இலங்கை சைவ பண்டிதர் சபையானது 2023 ஆண்டில் நடாத்திய சைவ பண்டிதர், இளஞ்சைவ பண்டிதர் தேர்வுகளில் சித்தி பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சைவத்தமிழ் மன்றத்தின் தலைவர் - கிழக்கு பல்கலைக்கழக மருத்துவத்துறை பீடாதிபதி சைவப் புலவர் சைவப் பண்டிதர் பேராசிரியர் தி.சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னிலை அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி வ.குணபாலசிங்கம் ஆகியோரும் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகமும் கலந்து சிறப்பித்தனர்.

இம்முறை ஒரு சைவப் பண்டிதரும், பதினெட்டு இளஞ்சைவ பண்டிதர்களும் பட்டங்களைப் பெற்றனர். மாணவர்களின் கண்கவர் நடனங்களும் நிகழ்வில் இடம்பெற்றன.

சைவத் தமிழ் மன்றப் பொதுச் செயலாளர் சைவ-பண்டிதர், சைவப்புலவர் செ.சாந்தரூபன் உள்ளிட்ட நிருவாகிகளும் கலந்து கொண்டனர்.

# புதிய அதிபர்களுக்கு நிலைப்படுத்தல் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டன





(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய புதிய அதிபர்களுக்கான பாட-சாலை நிலைப்படுத்தல் கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

இலங்கை அதிபர் சேவைதரம் 3 க்கான போட்டிப்பரீட்சை கடந்த 2019 இல் நடைபெற்றது. இதற்கான நேர்முகப்பரீட்சை கடந்த 2023 இல் நடைபெற்று அதிபர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

பயிற்சிக்குப் பின்னர் பாடசாலைகளை ஒழுங்கு செய்து வழங்கும் பணி தற்போது இடம்பெற்றுள்ளது.



## சாய்ந்தமருது அல் - ஜலால் வித்தியாலத்தில் பல்லூடக ஆராய்ச்சி - அபிவிருத்திப் பிரிவு

(நூருல் /ஹுதா உமர்)

முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம் எம்.எம். முஸ்தபா (மயோன் முஸ்தபா) அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வரும் றிஸ்லி முஸ்தபா கல்வி மேம்பாட்டு மற்றும் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகருமான றிஸ்லி முஸ்தபா அனுசரணையில், கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு-கமு-அல்-ஜலால் வித்தியாலயத்தில் மர்ஹூம் மயோன் முஸ்தபா பல்லூடக ஆராய்ச்சி - அபிவிருத்திப் பிரிவு இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு-களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் அவர்க-ளின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூரும் வகையில் தேசிய கொடி பிரதம அதிதியால் ஏற்றி வைக்கப்பட்டு, பல்லூடக ஆராய்ச்சி - அபிவிருத்திப் பிரிவின் திறப்பு விழாவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய உப பரிசோதகர் ரவூப் விசேட அதிதியாக கலந்து கொண்டதுடன், பாடசாலையின் பிரதி அதிபர் டீ.கே.எம். சிராஜ், உதவி அதிபர் எம்.ஏ.எம். சிராஜ், பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## கொட்டகலை வெற்றி முன்பள்ளி சான்றிதழ் - பரிசளிப்பு விழா

(எஸ். சினீஸ் கான்)

கொட்டகலை வெற்றி முன்பள்ளி பாடசாலை ஏற்பாடு செய்திருந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல் மற்றும் பரிசளிப்பு விழா அண்மையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட நுவ-ரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வா-கனம் உதயகுமார் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்ததுடன் பாடசாலைப் புத்தகப் பைகள் மற்றும் பரிசுகளையும் வழங்கினார்.



# இனப் பாகுபாடுதான் பெரிய வலியை ஏற்படுத்தும்! பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்தார்

குழந்தைப் பருவத்தில் இனப் பாகுபாட்டை எதிர கொண்டதாக பிரித்தானியப் பிரதமார் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார். உரிய உச்சரிப்புடன் பேசும் விதமாக அதற்கான முயற்சிகளைத் தன்னுடைய பெற்றோர் மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திய வம்சாவளியைச் சோர்ந்த ரிஷி சுனக், பிரித்தானிய ஆளுங்கட்சியான கன்சர் வேடிவ் கட்சியின் தலைவராக கடந்த 2022 இல் தோர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, அவர் பிரித்தானியாவின் பிரதமரானார்.

பிரித்தானியாவின் முதல் ஹிந்து பிரதமார், இந்திய வம்சாவளியைச் சோர்ந்த முதல் பிரதமார் என்ற அடையாளங்களுக்குரியவார் ரிஷி சுனக். மேலும் அந்நாட்டில் கடந்த 210 ஆண்டுகளில் மிக இளம் வயதில் பிரதமார் ஆனவார் என்ற சிறப்பும் அவருக்கு உண்டு. இந்நிலையில், பிரித்தானிய தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு அண்மையில் அளித்த பேட்டியில் பிரதமார் ரிஷி சுனக், சிறு வயதில் இனப் பாகுபாட்டை எதர்கொண்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக ரிஷி சுனக் கூறுகையில், 'இனப் பாகுபாட்டைவிட வேறெதுவும் பெரிய வலியை ஏற்படுத்துவதில்லை. தன்னுடைய குழந்தைகள் எவ்வாறு பேச வேண்டும் என்பதில் என்னுடைய தாயார் மிகவும் கவனமாக இருந்தார். நானும் எனது தம்பி, தங்கையும் ஆங்கிலத்தில் உரிய உச்சரிப்புடன் பேச வேண்டும் என்பது அவருடைய விருப்பமாக இருந்தது. இனப் பாகுபாடு எந்த வகையில் இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று குறிப்பிட்டிருக்கிறார். (04)





## நமீபியாவின் அதிபர் ஹாகே கெயின்கோப் 82 ஆவது வயதில் புற்றுநோயால் மரணம்!

தெற்கு ஆபிரிக்க நாடான நமீபியாவின் அதிபர் ஹாகே கெயின்கோப் 82 ஆவது வயதில் புற்றுநோயால் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் நமீபியா அதிபராகப் பதவி வகித்து வந்த கெயின்கோப்பின் இரண்டாவது மற்றும் இறுதி பதவிக் காலம் இந்த ஆண்டுடன் நிறைவடைய இருந்தது.

2014 ஆம் ஆண்டுமுதல் புற்றுநோயுடன் போராடி வந்த அவர், சிகிச்சைக்காக கடந்த ஜனவரி 8 ஆம் திகதி அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார்.

சிகிச்சை முடிந்து கடந்த 31 ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார். இந்நிலையில், மீண்டும் பாதிப்பு தீவிரமடைந்ததையடுத்து உள்ளூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், நோயின் தீவிரத்தால் அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிக அதிபராகப் பொறுப்பேற்றுள்ள அங்கோலோ மெபும்பா எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்த இக்கட்டான நேரத்தில் மக்கள் அமைதிகாக்க வேண்டும். நாட்டின் நிர்வாகம் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைக்காக அமைச்சரவை உடனடியாக கூட்டப்படுகிறது', என்று கூறியுள்ளார்.

ஜொர்மனி மற்றும் தென்னாபிரிக்காவிடம் அடிமைப்பட்டிருந்த நமீபியா கடந்த 1990 ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. அப்போது முதல் 2002 வரை அந்நாட்டின் முதல் பிரதமராக கெயின்கோப் இருந்தார். 2002 இல் இருந்து சில ஆண்டுகள் நாட்டின் வார்த்தக அமைச்சராகவும், மீண்டும் 2008 முதல் 2012 வரை பிரதமராகவும் அவர் பதவியை வகித்திருந்தா்.

ஆரம்ப காலத்தில் தென்னாபிரிக்காவில் இனவெறிக்கு எதிராகப் போராடிய அவர், பல ஆண்டுகளாக தலைமறைவாக வாழ்ந்து வந்தார். நமீபியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பிறகு அமெரிக்கா, சீனா மற்றும் பல்வேறு நாடுகளுடன் கெயின்கோப் நட்புடன் செயல்பட்டு வந்தார். அவரது மறைவுக்கு சர்வதேச தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். (04)

## கனடாவில் சிக்கிய அதிகளவு போதைப்பொருள் இந்திய வம்சாவளி வாகனச் செலுத்துநரும் கைது





400 கிலோ எடையுள்ள மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் பொதிகளுடன் இந்திய வம்சாவளி வாகனச் செலுத்துநர் ஒருவர் கனடாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடா நாட்டின் மானிடோபா மாகாணத்தின் போய்செவைன் பகுதி வழியாக வந்த பாரவூர்தியை பொலிஸார் மடக்கி சோதனை நடத்தியபோது அதில் 406.2 கிலோ எடையுடைய மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து வாகனத்தை ஓட்டியவரான கோமல்பிரீத் சித்து கைது செய்யப்பட்டார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவரது குடும்பம் கனடாவில் வசித்து வருகிறது.

இந்த போதைப்பொருளானது மிகப்பெரிய சூட்கேஸ்களில் அடுக்கி பாரவூர்திக்குள் வைக்கப்பட்டிருந்தது. இதன் மதிப்பு 5.1 கோடி கனடா டொலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கனடா எல்லைச் சேவை முகமையின் மண்டல பொது இயக்குநர் ஜனாலி பெல்-பாய்சுக் கூறும்போது, கடந்த ஜனவரி 14 ஆம் திகதி எல்லைப் பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது இந்த போதைப்பொருட்களை கைப்பற்றினோம். கனடாவில் பிடிபட்ட மிகப்பெரிய அளவிலானபோதைப்பொருள் அளவு இதுவாகும்.

இந்த மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளானது மூளையை தூண்டி உற்சாகமான மன நிலையை கொடுக்கும். அதேவேளையில் மத்திய நரம்பு மண்டலத்தை பாதிக்கும் ஒரு சக்திவாய்ந்த போதைப்பொருளாகும். இது பசியின்மையை ஏற்படுத்தும் திறன் கொண்டது. வெள்ளை நிறத்தில் மணமற்றதாக இருக்கும் மெத்தம்பெட்டமைன் தண்ணீர் மற்றும் அல்கஹோலில் எளிதில் கரையும். இதை மாத்திரையாகவும், தூளாகவும் போதைக்குப் பயன்படுத்துகின்றனர். கைதான 29 வயது கோமல்பிரீத் சித்து, கனடாவின் வின்னிபெக் பகுதியைச் சேர்ந்தவர். இந்த பாரவூர்தி, அமெரிக்காவில் இருந்து மானிடோபா மாகாணத்துக்கு சென்று கொண்டிருந்தது, என்று குறிப்பிட்டுள்ளார். (04)

## பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு அமைச்சருக்கு 5 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடத் தடை விதிப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு மிகவும் நெருக்கமானவரும், அவருடைய ஆட்சியில் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பதவி வகித்தவருமான ஷா மஹ்மூத் குரேஷி, 5 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய ரகசியத் தகவல்களைக் கசியவிட்டு, அதன்மூலம் ரகசியக் காப்புறுதியை மீறியதாக இம்ரான் கான் மற்றும் மஹ்மூத் குரேஷிக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கில் அவர்கள் இருவருக்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, தேர்தலில் போட்டியிட குரேஷிக்கு தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

முன்னதாக, சிறையில் உள்ள இம்ரான் கானுக்கும் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் வரும் வியாழக கிழமை (பெப். 8) நடைபெறவிருக்கிறது. இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாப் கட்சி (பிடிஐ) பல்வேறு பின்னடைவுகளுக்கு இடையே இந்தத் தேர்தலில் போட்டியிட்டுள்ள சூழலில், தனது 'கிரிக்கெட் மட்டை' சின்னத்தையும் இழந்துள்ளது. (04)

## சிலியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 46 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிப்பு

தென்னமெரிக்க நாடான சிலியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 46 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் அடர்த்தி மிகுந்த நாட்டின் மத்திய பகுதியில் தீ ஏற்பட்டதே உயிரிழப்பு அதிகரிக்க காரணம் என்று அரச தரப்பில் கூறப்பட்டுள்ளது.

காட்டுத் தீயால் 1,100 வீடுகள் முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளன என்றும், தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் தீவிரமாகப் போராடி வருகின்றனர் என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய அந்நாட்டு அதிபர் கபிரியல் போரிஸ், 'வல்பராய்சோ பிராந்தியத்தில் 4 இடங்களில் மிகத் தீவிரமான காட்டுத் தீ பரவியுள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும். நாட்டு மக்கள் அனைவரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு ஒத்துழைக்க வேண்டும். இருப்பிடத்தைவிட்டு வெளியேற அதிகாரிகள் அறிவுறுத்தினால் உடனடியாக அதைக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில், தீ மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. கோடை காலத்துடன் காற்றும் சேர்ந்துள்ளதால் தீயைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது', என்றார். கடந்த சனிக்கிழமை சிலியின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் 92 இடங்களில் காட்டுத் தீ ஏற்பட்டது. வெப்பநிலை மிகவும் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. (04)

# கல்முனை மாநகர பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிப்பு




(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள கல்முனை கமு.கமு.பஹ்ரியா மகா வித்தியாலயம், சாய்ந்தமருது கமு.கமு.எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம், நற்பிட்டிமுனை கமு.கமு. லாபீர் வித்தியாலயம், மருதமுனை - பெரியநீலாவணை கமு.கமு.அக்பர் வித்தியாலயம், கல்முனை கமு.கமு.அஸ் ஸ/ஹறா வித்தியாலயம், கல்முனை கமு.கமு.அஸ்ஹர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விஜயம் செய்து பாடசாலைகளின் குறைநிறைகளையும், கல்வி மேம்பாட்டு தேவைகளையும் பாடசாலை நிர்வாகத்திடம் கேட்டறிந்தார்.

இந்த விஜயத்தின் போது மாணவர்களிடம் கல்வி மேம்பாடு தொடர்பிலும், எதிர்கால கல்வி நிலைகள் தொடர்பிலும், பாடசாலை கால ஒழுக்க விடயங்கள் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்தியதுடன் கல்முனை கமு.கமு. பஹ்ரியா மகா வித்தியாலயம், சாய்ந்தமருது கமு.கமு. எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம், நற்பிட்டிமுனை கமு.கமு.லாபீர் வித்தியாலயம், மருதமுனை - பெரியநீலாவணை கமு.கமு. அக்பர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு கிழக்கு மாகாண சபை ஊடக கிடைக்கப்பெற்ற பாடசாலை புத்தக பைகளையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். /ஹுதா உமர், பாராளுமன்ற உறுப்பினரின் உத்தியோகத்தர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதேச முக்கியஸ்தர்கள், பாடசாலைகளின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதிகள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு வளத்தாப்பிட்டியில் நடமாடும் சேவை



(நூருல் /ஹுதா உமர்)

உலக தொழுநோய் தினத்தினை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் வைத்திய சேவை சம்மாந்துறை வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு குறித்த நடமாடும் வைத்திய சேவையினை ஏற்பாடு செய்திருந்தது.

பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம்.கபீர், உதவி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி ஜீவராணி சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்ததுடன் குறித்த நோய் தொடர்பாக வைத்திய ஆலோசனைகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வில் யுனுவு அமைப்பினர், பிராந்திய மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல். லபீர் மற்றும் ஜீ.சுகந்தன் ஆகியோரும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டதுடன் நிகழ்விற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவைக்கான புதிய அலுவலகம் திறப்பு

(அஸ்லம் மௌலானா, யூ.கே.காலித்தீன்)



சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவைக்கென முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்/ஹும் மயோன் முஸ்தபாவின் ஞாபகார்த்தமாக அவரது புதல்வரும் கல்வி உதவி சமூக அமைப்பின் தவிசாளருமான எம்.எம். றிஸ்லி முஸ்தபாவின் நிதியுதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட அலுவலகக் கட்டடத் தொகுதி நேற்று ஞாயிறன்று நாட்டின் 76வது சுதந்திர தின நிகழ்வுடன் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான அப்துல் சலாம் அஸ்வரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளருடன் கல்வி உதவி சமூக அமைப்பின் தவிசாளர் எம்.எம். றிஸ்லி முஸ்தபா, சாய்ந்தமருது ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஹிபத்துல் ஹரீம், சாய்ந்தமருது ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் எம்.எம். சலீம் மௌலவி ஆகியோர் இணைந்து ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவைக்கான அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர்.

இதன்போது அனுசரணையாளரான றிஸ்லி முஸ்தபா, ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். எல். சம்சுதீன், சம்மாந்துறை உஸ்வா அமைப்பின் தலைவர் எம்.முஸ்தபா மௌலவி உட்பட பள்ளிவாசல்கள் நிர்வாகிகள், ஜம்மிய்யத்துல் உலமா சபையின் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பினர், நன்கொடையாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# குடல் புற்றுநோய்க்கான தடுப்பூசி ஆய்வு முன்னெடுப்பு

## இந்திய வம்சாவளி பிரித்தானிய மருத்துவர் அறிவிப்பு

குடல் புற்றுநோய் தடுப்பூசிக்கான பரிசோதனைகள் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரித்தானிய மருத்துவர் டோனி தில்லான் தலைமையில் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச அளவில் அதிக எண்ணிக்கையிலான பாதிப்புகளைக் கொண்ட புற்றுநோய் வகையில், குடல் புற்றுநோய் மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்த நோய்க்கு ஆண்டுக்கு 12 லட்சம் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய்க்கான உயிரிழப்பு 50 சதவீதமாக உள்ளது.

குடல் புற்றுநோய் தடுப்பூசி குறித்து சர்வதேச அளவில் நோயாளிகளைப் பயன்படுத்தி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக பிரித்தானியாவின் ரோயல் சரே அரச மருத்துவமனையில் புற்றுநோய் மருத்துவர் டோனி தில்லான் அண்மையில் அறிவித்தார். இந்தத் தடுப்பூசியை உருவாக்கும் பணியில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பேராசிரியர் டிம் பிரைஸ்/டன் இணைந்து கடந்த 4 ஆண்டுகளாக அவர் பணியாற்றி வருகிறார்.

இந்தத் தடுப்பூசி குறித்து தில்லான் கூறுகையில், 'குடல் புற்றுநோயைப் பொருத்தவரையில் இதுவே முதல் தடுப்பூசிச் சிகிச்சையாக இருக்கும். இந்தத் தடுப்பூசி வெற்றி பெறும் என நம்பிக்கை உள்ளது. குடல் புற்றுநோய் பாதித்த நோயாளிகள், இந்தத் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளும்போது முழுமையாகக் குணமடைவர்.

குடல் புற்றுநோய் சிகிச்சையில் இது பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். புற்றுநோய் பாதிப்பால் நோயாளியின் நோய்த்தடுப்பாற்றல் மண்டலத்தின் செயல்திறன் குறையும் நிலையில், இந்தத் தடுப்பூசி நோய்த்தடுப்பாற்றலை அதிகரிக்கும். இதனால், அந்த நோயாளி சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையிருக்காது', என்றார்.

இந்தத் தடுப்பூசியை நோயாளிகளுக்கு செலுத்தும் சோதனைகள் சோதனைகள் பிரித்தானியாவில் 4 இடங்களிலும் அவுஸ்திரேலியாவில் 6 இடங்களிலும் நடைபெறவுள்ளன. உலகளவில் பதினெட்டு மாத காலம் நடைபெறும் இந்தப் பரிசோதனை மொத்தம் 44 நோயாளிகளில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.






## பெயர் மாற்றத்துக்கு உள்ளாகவுள்ளது கூகுளின் புதிய செய்யறிவு தொழிநுட்பம்

கூகுளின் புதிய செய்யறிவு தொழிநுட்பமான பார்ட்டுப்பு (Bard) பெயர் மாற்றம் செய்யப்போவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. பார்ட்டுடன் புதிய ஜெமினி (Gemini) செய்யறிவு தொழிநுட்பத்தை இணைத்துள்ள கூகுள், பார்ட்டையும் 'ஜெமினி' எனப் பெயர் மாற்றவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஓப்பின் ஏஐ (Open AI) நிறுவனத்தின் சாட் ஜிபிடிக்கு (ஊாயவ பீவு) போட்டியாக களமிறங்கிய ஜெமினியில் பல புதிய மாற்றங்களைத் தொடர்ந்து வருவதாக கூகுள் தெரிவிக்கிறது. பெயர் மாற்றம் குறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் வெளியிடப்படாத நிலையில், ஜெமினி செயலி உருவாக்கும் டைலன் ரௌசெல்லிடமிருந்து கிடைத்த தகவல்படி பெயர் மாற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஜெமினியில் குரல்வழி உரையாடல்களை மேற்கொள்ளும் வகையிலான புதிய அம்சங்களையும், ஜெமினி அட்வான்ஸ்ட் அல்ட்ரா 1.0 என்ற புதிய ஜெமினி வடிவத்தையும் கூகுள் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது பயன்பாட்டிலுள்ள ஜெமினி அட்வான்ஸ்ட் - இதுவரை 230 நாடுகளில் பயனாள்ரகளுக்குக் கிடைக்கிறது. இந்தச் சேவைக்கு பணம் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. 40 மொழிகளில் இந்த ஜெமினி செய்யறிவு இயங்குகிறது. அதில் தமிழ் உட்பட 9 இந்திய மொழிகளும் அடங்குகின்றன.






# காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பினால் ஐ.நா. காரியாலய முன்றலில் போராட்டம்




(நூருல் /ஹுதா உமர்)

காஷ்மீர் விடுதலைக்கான அமைபபின் ஏற்பாட்டில் காஷ்மீர் ஒற்றுமை தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு காரியாலயத்தின் முன்னால் இன்று திங்கட்கிழமை பதாதைகளை ஏந்திக்கொண்டு காஸ்மீர் விடுதலைக்கான அமைப்பினர் கவனவீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும், ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீரிகளை மனிதாபிமான மற்ற முறையில் நடத்துவதையும் இவர்கள் தமது பதாதைகளில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இவ்விடயத்தில் தலையிட்டு இரு நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைக்க வேண்டும். சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக காஷ்மீரிகளின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்திற்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன் காஷ்மீர் மக்களின் நிரந்தர துயரங்களை நோக்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப, ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை வலியுறுத்துவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஏழு தசாப்தங்களாக ஆக்கிரமிப்புப் படைகள் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு மற்றும் காஷ்மீரில் செய்த மனித உரிமை மீறல்களை கண்டித்த அவர்கள் காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப காஷ்மீரில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதை உறுதி செய்ய உலக நாடுகளும் கடமைப்பட்டுள்ளன எனக்குறிப்பிட்டனர்.

இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் கொழும்பு நகரசபை முன்னாள் உறுப்பினர்களான ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான், எஸ்.எம். முஸம்மில் உட்பட பலரும் கலந்து கொண்டு மகஜர்களையும் கையளித்தனர்.

## அமரர் அதிபர் சிவி.எட்வேட் நவரட்ணசிங்கம் நூற்றாண்டு விழாவும்

# CVEN கல்வி வளாகம்

## அறக்கட்டளை அங்குரார்ப்பண நிகழ்வும்



நெடுந்தீவு என்பது இலங்கையில் உள்ள மிகப்பெரிய தீவு. அதுமாத்திரமல்ல யாழ் தீவகற்பத்திலிருந்து நெடுந்தொலைவில் உள்ள தீவுமாகும். எமது தாய்மண் நெடுந்தீவின் கற்றறிந்த பல சான்றோர்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

எமது மண்ணில் தனது ஆத்மார்த்தமான கல்விப்பணியினால் உருவாக்கப்பட்ட தனது மாணவர்கள் ஊடாக உலகப்பரப்பில் ஊரின் பெருமை அறியச்செய்தவர் அமரர் சிவி. எட்வேட் நவரத்தினசிங்கம் என்னும் எம் தீவகத்தின் கல்விப்புல பிதாமகன் ஆவார். அவர் எமது மண்ணில் கல்விப்பணியாற்றிய காலம் நெடுந்தீவின் கல்வித்துறையின் மறுமலர்ச்சிக்காலம் எனக் கூறலாம்.

ஏனெனில் அவர் அதிபராக கடமையாற்றிய நெடு. மகாவித்தியாலயத்தில் மாத்திரமல்ல ஒட்டு மொத்த ஊரின் கல்விப்புலத்தில் மாபெரும் மறுமலர்ச்சியினை ஏற்படுத்துவதிலே அஞ்சா நெஞ்சனாக அவர் அரும்பணியாற்றியுள்ளார். அவர் கல்விப்பணியாற்றிய காலம் அவரது குடும்பமானது செல்வச் செழிப்புடன் வாழவில்லை இருப்பினும் குழந்தைகள் நிரம்பிய அந்த வீட்டை அவர் வழங்கும் வாரச் செலவிற்கு பத்து ரூபாவினைக் கொண்டு குடும்பத்தைக் கொண்டு நடத்தி அவரது கல்விப் பணிக்கு உறுதுணையாய் இருந்துள்ளார் அவரது மனைவியார்.

அவர்காலத்தில் கல்விகற்பதற்கு முடியாமல் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிய பல மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள், மாலைநேரவகுப்புக்கள் தொழிற்கல்வி மற்றும் மாணவர் தங்குமிட வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக்கொடுத்து அவர்கள் வாழ்வில் விளக்கேற்றியுள்ளார். அதுமாத்திரமல்ல பாடசாலைக்கல்வி நிறைவு செய்தவர்கள் மேலும் தொடர்ந்து உயர் கல்வி கற்பதற்கு ஏற்ற வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களது வாழ் வியலின் முன்னேற்றத்திற்கான வழிகாட்டியாகவும் திகழ்ந்துள்ளார்.

இவ்வாறான அரும்பணியினை நெடுந்தீவு மண்ணிலே ஆற்றிய அமரர் சிவி எட்வேட் நவரடணசிங்கம் அவர்களின் மாணவர்கள் அவரது பணியினை என்றும் போற்றத்தக்க வகையில் CVEN CAMPUS எனும் கல்விச்சாலையினை நாளை நெடுந்தீவில் திறந்து வைக்கின்றனர். இது எமது மண்ணில் மிக முக்கியமான வரலாற்றுச்சம்பவம் ஆகும்.

இதன் நிறுவனரான திரு.இரா.மருதநாயகம் அவர்கள் அமரர் சிவி. எட்வேட் நவரட்ணசிங்கம் ஞாபகார்த்தமாக அவரது அறக்கட்டளையூடாக இவ்வாறானதொரு கல்விச்சாலையினை அமைக்கவேண்டும் என்பதில் ஒரு நீண்டகாலக் கனவுடன் வாழ்ந்து கொண்டிருந்தார். அவருடனான ஒவ்வோர் உரையாடலிலும் இவ்விடயம் தொட்டுச்செல்லப்படுவதனை நான் அவதானித்துள்ளேன். சொல்லப்போனால் தான் கண்ணை மூடுவதற்குள் இவ்வாறானதொரு கல்விச்சாலையினை நிறுவ வேண்டும் என அவர் கண்ட ஆத்மார்த்தக் கனவு இன்று நிறை வேறியிள்ளது.



அவரது இந்த அயராத முயற்சியின் வெற்றிச்சாதனையின் காரணகர்த்தா அவரது துணைவியார் திருமதி மருதநாயகம் ஜோசபின் ஆன்ம திடமும் தமது துணைவரின் உயரிய சிந்தனையை நிஜமாக்குவதற்கு அவர் அளித்த மனமார்ந்த ஒத்துழைப்பும் இப்பணியில் இணைந்தோருடன் அவரது அன்பு கலந்த உரையாடலும் அவரை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தியது.

அதுமாத்திரமல்ல நாம் வாழும் வளர்ந்த நாடுகளிலே பல பணவசதி படைத்தவர்களும் இளந்தலை முறைகள் கூட சமூகப் பணி என்கின்ற விடயத்தில் தயங்கி நிற்கின்ற சூழலில் இவர்கள் இருவரும் இந்த வெற்றிப்பணியினை நிகழ்த்தியிருக்கின்றார்கள் என்றால் அது மகத்தான ஒரு விடயம் போற்றிப் பாரட்டவேண்டிய விடயம்.

இவர்கள் எமது எதிர்காலச்சந்ததிகளுக்கு ஒரு சிறந்த வழிகாட்டிகளாக திகழ்கின்றார்கள். இக்கல்விச்சாலை உருவாக்கத்திலே திரு.இரா. மருதநாயகம் என்கின்ற பெருமகனின் பணிமுற்சிக்காக அவரது துணைவியார் மற்றும் மகள் செல்வி.ம.காருண்யா ஆகியோருடைய மனமார்ந்த ஒத்துழைப்பும் இப்பொதுப்பணிக்காக அவர்கள் ஒட்டுமொத்த குடும்பத்தின் தியாகத்தையும் நிச்சயம் பாராட்டியாக வேண்டும்.

உண்மையில் நிறுவனரின் இந்த ஆத்மார்த்த சிந்தனையினை செயல்வடிவம் கொடுப்பதிலே அமரர் சிவி.எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்களின் மாணக்கர்கள் பலரின் அரும்பணியும் திரு.இரா.மருதநாயகம் அவர்களின் நண்பர்களின் ஒத்துழைப்பும் ஊரின் நலன்விரும்பிகளின் ஒத்தாசைகளும் இதற்கு வலுச்சேர்த்துள்ளது.

உருவாக்கப்பட்டுள்ள CVEN CAMPUS நெடுந்தீவின் வரலாற்றில் நீடித்த கல்விப் பணியாற்றவேண்டும். அது எமது மண்ணின் எதிர்கால அடயாளமாக மாற்றமடைய வேண்டும். அற்காக எமது ஊரின் உறவுகள் எல்லோரும் ஒன்றிணைந்து அதன் பணிகளில் பக்கபலாமாக என்றென்றும் இருக்க வேண்டும் என்பது எம் எல்லோர் முன்னிலையிலும் இருக்கும் அன்பான வேண்டுகோள். அதன்வழி நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும்.

காலம் எமது மண்ணின் தேவை கருதி பலவற்றை பிரசவிக்கின்றது அந்தவகையில் திரு.இரா.மருதநாயகம் பெருமகனாரின் அயராத முயற்சி சிவி.. எட்வேட் நவரட்ணசிங்கம் கல்வி வளாகத்தையும், அறக்கட்டளையையும் சாத்தியமாக்கியுள்ளது.

CVEN CAMPUS எனும் இப்பெயரானது Cinnaya Vethanayagam Edward Navaratnasingam Campus எனும் ஒரு விரிவாக்கத்தையும் அதேபோல் Central Vision Education Network Campus எனும் விரிவாக்கத்தையும் கொண்டதாக அமைந்துள்ளது.

எமது நெடுந்தீவின் வழமையான நகைச்சுவை கொண்ட சிலேடை மொழியில் கூறினால் நெடுந்தீவில் போய் சீவியன் (வாழ்தல்) எனவும் எதிர்காலத்தில் பேசப்பட இது வாய்ப்பிருக்கின்றது. எனவே ஊஏநுே ஊயுஆீருளு நெடுந்தீவின் எதிர்கால கல்விப்புலத்தின் வழிகாட்டி மையமாக திகழும். அதற்காக நம்மவர் கரங்கள் ஒன்றாய் அணிதிரள வேண்டும்.

ஊரில் உள்ள கல்விகல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், கல்வியலாளர்கள் ஊரின் நலன்விரும்பிகள் ஒற்றுமையுணர்வுடன் பணியாற்றுவோமாக இருந்தால் எம்மண்ணின் எதிர்கால கல்வி வளர்ச்சியை இலகுவில் சாத்தியமாக்கலாம்.

அந்தவகையில் அமரர் அதிபர் சிவி.எட்வேட் நவரட்ணசிங்கம் நூற்றாண்டு விழாவும், CVEN கல்வி வளாகத்தினதும், அறக்கட்டளையினதும் அங்குரார்ப்பண நிகழ்வு சிறப்புற நடைபெற வாழ்த்துவதோடு அதன் பணி சிறக்க இறை ஆசி வேண்டுகின்றோம்.

**கிருபாகரன் தர்மலிங்கம் (கனடா).**
**முன்னாள் ஆசிரியர்**

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிய வைத்தியபீட மாணவர்கள் வரவேற்பு

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிய வைத்தியபீட மாணவர்கள் வரவேற்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பல்கலைக்கழக வைத்தியபீடத்தில் நடைபெற்றது.

வைத்திய பீட பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன் தலைமையில் நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 18 ஆவது வைத்திய அணி இதுவாகும். இதில் 115 மாணவர்கள் புதிதாக இணைந்திருக்கிறார்கள். கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் முன்னிலையில் புதிய மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2024 இல் வெளியிடப்பெற்றது.